www.tamilarangam.net

- இந்திய ராணுவத்தை விரட்டியடிப்போம் !

- தேசத் துரோகிகளை தூக்கியெறிவோம் !

- தமிழ் - சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியத்தின் மூலம் **புதிய ஜனநாயகப் புரட்சியை** முன்னெடுப்போம் !

**தமிழ் - சிங்கள மக்கள் நட்புறவுக் கழகம்**

# இந்திய ராணுவத்தை விரட்டியடிப்போம் !

# தேசத் துரோகிகளை தூக்கியெறிவோம் !

### இன்றைய நிலைமை

எங்கும் காணக்கூடியது படுகொலை செய்யப்பட்ட மனித உடல்கள் - எப்போதும் கேட்கக் கூடியது துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். இதுதான் இன்றைய இலங்கையின் நிலை. நதிகளில் மிதந்து செல்லும் பிணங்கள், மரங்களில், மின்சாரக் கம்பங்களில் தொங்க விடப்பட்டிருக்கும் மனித உடல்கள், சாலை ஓரங்களில் அரைகுறையாக எரிந்த நிலையில் சடலங்கள் என எங்கு பார்த்தாலும் படுகொலை செய்யப்பட்ட மனித பிரேதங்கள். தினமும் சராசரி 60 கொலைகள் நிகழ்கின்றன. இந்த வருடத்தில் மாத்திரம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மக்கள் வாழுகின்றனர். ஒருவித பயம் கலந்த பீதியுடனே தமது வாழ்க்கையை மேற்கொள்கின்றனர்.

''இலங்கை என்பது நம் தாய்த் திருநாடு எழில்மிகு இயற்கை வளம் நிறைந்த நம் நாடு'' என்ற புகழ்பெற்ற 'பொப்' பாடலில் குறிப்பிடுவதைப் போல் உண்மையாகவே அனைத்து வளமும் நிறைந்த எமது நாடு இன்று இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் யுத்த களமாகவே காட்சியளிக்கின்றது. ''சொர்க்கத் தீவு'' என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட நாடு இன்று தீப்பற்றி எரிகின்றது. 1977-ல் ஆட்சி பீடம் ஏறிய அய்க்கிய தேசியக் கட்சி **(U.N.P.)** அரசு இலங்கையை இன்னொரு சிங்கப்பூராக மாற்றுவோம் என்று முழங்கியது. ஆனால் இன்று எமது நாடு உள்நாட்டு யுத்தம் நிறைந்த லெபனான் நாட்டுடன் ஒப்பிட்டுப் பேசும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இப்பெருமை (!) அய்க்கிய தேசிய கட்சி அரசுக்கே சேரும்.

## தமிழ் மக்களின் நிலைமை

இன் ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து ஒரு புதிய திருப்பு முனையை அடைந்துள்ளது. முன்பு இலங்கை அரசின் இனவெறி இராணுவம் செய்த அதே வேலையை இன்று 'அமைதிப்படை' என்னும் பெயரில் இந்திய அரசு அனுப்பி வைத்த இந்திய இராணுவம் செய்கின்றது. எமது நாட்டின் உள்விவகாரங்களில் ஆணவத்துடன் தலையை நீட்டிய இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் சர்வதேச நியதிகளை மீறிய கீழ்த்தரமான போரை நடத்தி வருகின்றனர். தமிழ்மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இந்த அநீதிப் போருக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள துருப்புக்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் அதிகமாகும். யாழ்ப்பாணத்தில் 10 தமிழர்களுக்கு ஒரு இந்திய இராணுவ வீரர் என்ற விகிதத்தில் படைளைக் குவித்த பிறகும் கூட தமிழ் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை இவ் ஆக்கிரமிப்பாளர்களால் நசுக்க முடியவில்லை. ''இரண்டு நாட்களில் முடிவு கட்டுவோம்'' என்று கூறி யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் இன்று இரண்டு வருடமாகியும் முடிவு காண முடியாமல் தவிக்கின்றனர். ஒரு தேசிய இனத்தை அதன் சொந்த மண்ணில் எந்த வல்லரசாலும் தோற்கடிக்க முடியாது என்ற வரலாற்று

உண்மையை தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் மூலம் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்.

## இந்திய இராணுவமே மிகப் பெரும் எதிரி

1972 - ல் நடைபெற்ற சிங்கள இளைஞர்களின் எழுச்சியை (சேகுவாரா புரட்சி) நசுக்க உதவிய இந்திய இராணுவம் இன்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குகின்றது. இந்திய மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை மக்கள் அனைவருக்கும் மிகப் பெரிய எதிரியாக இந்திய இராணுவம் இருக்கின்றது. எனவே இந்திய புரட்சி மட்டுமல்ல இலங்கைப் புரட்சியும் கூட இந்திய இராணுவத்தை எதிர்த்த தீர்க்கமான போராட்டத்தில் தான் வெற்றி பெற முடியும் என்பதையே வரலாறு காட்டுகின்றது.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை நீண்ட காலமாகவே எதிர்த்து வந்த சிங்கள மக்கள் இன்று இந்திய இராணுவத்தின் வருகையை அடுத்து மிகவும் ஆத்திரமடைந்துள்ளனர். அந்நிய இராணுவம் ஒன்று தங்கள் சொந்த மண்ணில் வந்து நின்று வெறியாட்டம் போடுவதை எந்த நாட்டு மக்களுமே - அவர்கள் எந்த இனமாயினும் சரி, சகித்துக் கொள்ள முடியாது. எனவே தமிழர்களாயிருந்தாலும், சிங்களவர்களாயிருந்தாலும் இலங்கை மக்கள் அனைவரும் இந்திய அரசின் இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்ப்பது இயல்பான விடயமே. இந்நிலையில் ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழ் சிங்கள உழைக்கும் மக்களை அய்க்கியப்படாதவாறு தடுப்பவர்கள் இருதரப்பிலும் உள்ள சுயநலம் கொண்ட இனவெறியர்களே.

## பாசிச இனவெறி அரசும் சிங்கள மக்களும்

ஜே.வி.பி.யை ஒழிக்கிறோம் என்று கூறிக் கொண்டு இலங்கை அரசும் **U.N.P.** கட்சியினரும் சிங்கள மக்கள் மீது குண்டு மழை பொழிந்து வருகின்றனர் என்று ‘‘மனித உரிமைகள் மையத்தின் நிறுவனம்’’ கூட குற்றம் சாட்டியுள்ளது. ‘‘மனித உரிமைகளைப் பற்றியோ, மனித உயிர்களைப் பற்றியோ எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. மக்களைக் கொல்வது அவசியமானால் எத்தனை பேரை வேண்டுமானாலும் நாங்கள் கொன்று குவிப்போம்’’ என்று இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. அதன்படி செய்தும் வருகின்றது.

இவ்வாறு சொந்த நாட்டில் தன் இன மக்களையே நரவேட்டையாடி வருகின்றது பாசிச இலங்கை அரசு.

## இனி எந்தப் பாதையில்?

இன்று எமது நாட்டின் இறையாண்மைக்கும் எமது மக்களின் சுதந்திரத்திற்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து நிற்கின்றது இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம். சொந்த நாட்டு மக்களையே கொன்று குவித்து வருகின்றது பாசிச இனவெறி அரசு. இவையிரண்டிற்கும் முடிவு கட்டும் வரை நாளும் உக்கிரமடைந்து வரும் போராட்டங்கள் ஓயப்போவதில்லை.

தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஏற்பட்டுள்ள புதிய திருப்புமுனையைக் கணக்கில் கொண்டு நட்பு, எதிரி சக்திகளை சரியாகக் கணித்து செயல்படுவதன் மூலமே போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு உயர்த்திச் செல்ல

முடியும். இன்றைய நிலைமைகளில் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களது சிங்கள - தமிழ் கைக்கூலிகளுக்கும் எதிரான அறைகூவல் இலங்கை முழுவதற்கும் விடப்படல் வேண்டும். தமிழ் - சிங்கள உழைக்கும் மக்களை அய்க்கியப்படுத்தும் ஒரு பொதுத் திட்டத்தின் மூலமே அது சாத்தியம். பாராளுமன்ற போலி ஜனநாயகத்தை முன்வைக்கும் புரட்சிகரத் திட்டத்தின் மூலமே அது சாத்தியமாகும். புதிய ஜனநாயகம், சோசலிசம், கம்யூனிசம் என்று படிப்படியாக இலங்கைச் சமூகத்தை உயர்த்திச் செல்ல வழிவகுக்கும். அத்தகைய திட்டம் மட்டுமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கூட யதார்த்தத்தில் அங்கீகரிக்கின்ற ஒரு திட்டமாகும்.

- ❖ இலங்கையின் இறையாண்மையைக் காக்க ஒன்றுபடுவோம்.
- ❖ இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டியடிப்போம்.
- ❖ தமிழ் - சிங்கள தேசத் துரோகிகளைத் தூக்கியெறிவோம்.
- ❖ புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வோம்.
- ❖ தமிழ் - சிங்கள உழைக்கும் மக்களின் ஒற்றுமை ஓங்குக.

## இந்தியாவின் ஆக்கிரமிப்பு
### (வரலாறும் சர்வதேச பின்னணியும்)

ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்களையும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட போராளிகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களையும் பலியிட்டு மூவாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தை பாழாக்கி நடத்துகின்ற இந்த யுத்தத்தால் இந்திய ராஜீவ் அரசுக்கு என்ன ஆதாயம் என்ற கேள்விக்கு, ராஜீவின் ஊழல் ரகசியங்களைத் திசைத் திருப்பவே இந்த யுத்தம் என்கிறார்கள் சிலர். ராஜீவின் ஆலோசகர்கள் சிலர் தரும் தவறான தகவல்களே காரணம் என்கிறார்கள் வேறு சிலர். ஜெயவர்த்தனாவின் சாதுரியமான சூழ்ச்சியே காரணம் என்கிறார்கள் இன்னும் சிலர். இவர்கள் அனைவரும் முக்கியமான விடயத்தை மறந்து விடுகிறார்கள். இந்திய ஆட்சியாளர்களின் ஆதிக்க விஸ்தரிப்புவாத நலன்களும், பிராந்திய மேலாதிக்க நலன்களும்தான் இந்த நீண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் தீர்மானகரமான பின்னணி என்ற விடயம்தான் அது.

இந்திய அரசு தமது அண்டை நாடுகளை அச்சுறுத்துவதும், தங்களின் ‘வலிமையை’ அங்கீகரிக்கும்படி அந்நாடுகளை நிர்ப்பந்திப்பதும் அது வெள்ளைக்காரனின் கருவில் இருக்கும்போதே தொடங்கிவிட்டது. 1947 மார்ச்சில் ஆசிய உறவுகள் மாநாட்டில் நேரு பேசும்போது ‘‘எங்கள் அண்டை நாடுகள் எதற்கெடுத்தாலும் ஐரோப்பாவைத்தான் நோக்குகின்றன. கடந்த காலத்தில் தங்களுக்கு அனைத்தையும் தந்த நண்பர்களை (இந்தியாவை) மறந்து விடுகின்றன’’ என்று குறிப்பிட்டார். அரசியல் அதிகாரத்தை கையில் பெற்ற பின் இந்திய ஆட்சியாளர்களின் இந்த ‘‘பெரியண்ணாத்தை’’ குணம் தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வருகின்றது.

1949-ல் பூட்டான் நாட்டின் மீது ஒரு ஒப்பந்தத்தை திணித்தார் நேரு. ‘‘இந்தியாவின் அனுமதியுடன்தான் பூட்டான் தனது வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிக்க முடியும்’’ என வரையறுக்கிறது அவ் ஒப்பந்தம். 1950-ல் சிக்கிம் நாட்டின் மீது மற்றொரு மேலாதிக்க ஒப்பந்தத்தை திணித்தார் நேரு. ஜன நாயகப் பற்றுள்ள இந்தியர்களாலேயே கடுமையாக விமர்சிக்கப்பட்ட அவ்ஒப்பந்தத்தின்படி சிக்கிம் இந்திய நாட்டின் பின் தளமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. பின் சிக்கிம் இந்தியாவின் மாநிலமாகவே பலாத்காரமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

தன் தந்தையின் வழியிலேயே நடந்த இந்திரா காந்தி 1972-ல் பங்களாதேசுக்கு படைகள் அனுப்பி பாகிஸ்தானை துண்டாடினார். சீனா மீதும் அடிக்கடி பாகிஸ்தான் மீதும், கெடுபிடிப் போர்கள் தொடுப்பதும், ‘‘சந்திக்கத் தயார்’’ என மிரட்டல்கள் விடுவதும் இந்திய ஆட்சியாளர்களின் இடையறாத பணிகளில் ஒன்று. தெற்காசியப் பகுதி முழுவதற்குமே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று மவுண்ட்பேட்டனால் கருதப்பட்ட இலங்கை மீது அவரது இந்திய வாரிசுகள் ‘‘அக்கறை’’ கொண்டிருந்தது இயல்பானதே. இலங்கையில் இனப் பிரச்சனை முற்றி வெடித்தபோது அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரத் திட்டமிட்டனர் இந்திய ஆட்சியாளர்கள்.

நேரு, இந்தியாவின் தப்பாத வாரிசான ராஜீவ் ஆட்சிக்கு வந்ததும் இலங்கை ஆக்கிரமிப்புக்கான திட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டன. தமிழ் போராளிகளுக்கு பண உதவி, ஆயுத உதவி கொடுத்து வளர்த்தது, ஜெயவர்த்தனா அரசை மிரட்டி பணிய வைத்தது, ஆக்கிரமிப்பு படைகளை இலங்கைக்குள் நுழைக்க அனுமதியெடுத்துக் கொண்டது, தனது உளவுப்படை ‘ரா’ மூலம் போராளிகளுக்கிடையில் சண்டையை உருவாக்கியது, தங்கள் ஆக்கிரமிப்புக்கு பணிய மறுத்த போராளிகள் மீதும் - தமிழ் மக்கள் மீதும் போர் தொடுத்திருப்பது இவையனைத்தும் திட்டமிட்ட ஆதிக்க விஸ்தரிப்புவாத முயற்சிகளின் பகுதிகளே.

இலங்கையின் தமிழ் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்தும் தமது ஆக்கிரமிப்பைத் தொடர்வதற்கான அனைத்து சதி முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவின் புதிய இராணுவ தளபதியாக பொறுப்பேற்றுள்ள விசுவநாத சர்மா ‘‘இந்திய அமைதிப்படையைக் குறைந்தது 4 அல்லது 5 ஆண்டுகளுக்காவது திருப்பி அழைக்க முடியாது’’ எனக் குறிப்பிட்டிருப்பது, இந்திய ஆட்சியாளர்களின் இலங்கை ஆக்கிரமிப்பு நீண்ட கால அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையே அறிவிக்கிறது. மேலும் ‘‘இலங்கை ஜனாதிபதி கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அமைதிப்படை அனுப்பப் படுகின்றது. இலங்கை ஜனாதிபதி கேட்கும் பட்சத்தில் அமைதிப் படையை உடன் திருப்பி அழைக்கப்படும்’’ என்று இந்திய பிரதமர் ராஜீவ் அடிக்கடி வலியுறுத்தினார். ஆனால் இன்று இலங்கை ஜனாதிபதி மட்டுமல்ல பல கட்சிகள், தலைவர்கள் உட்பட இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் கேட்டுக் கொண்ட பின்பும் கூட இந்திய அரசு அமைதிப் படையை விலக்கிக் கொள்ள மறுப்பது அதன் ஆக்கிரமிப்புத் தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கை ஆக்கிரமிப்பின் மூலம் இந்திய அரசு, தன்னை ‘‘தெற்காசியாவின் போலீஸ்காரனாக நியமித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் ‘பெருமை’க்காகவும், இதனால் கிடைக்கும் ஆதாயங்களுக்காகவும் இந்திய அரசு இன்னும் ஆயிரக்கணக்கானோரை கொலை செய்யவும், கோடிக்கணக்கான ரூபாயை செலவழிக்கவும் தயாராக இருக்கின்றது. இந்திய அரசின் சிறந்த ‘தோழர்’களான ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்திற்கும் இவ் இந்திய ஆக்கிரமிப்பில் முழுத் திருப்தியே. இந்திய நாட்டில் ஏராளமாக கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இவ் இந்திய ஆக்கிரமிப்பை தற்காலிகமாகவாவது ஆதரிப்பதுதான் ஆதாயம் என்று கணக்கிட்டுள்ளது. இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் நலன்களும், அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் தேடும் ரஷ்ய, அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசுகளின் நலன்களும் பேணப்படுவதற்காகத்தான் இலங்கையில் அப்பாவி மக்களின் தலைகள் வெட்டப்படுகின்றன.

## தீர்வு என்ன?

ஏதாவது ஒரு வல்லரசின் அடிவருடியாக இருந்தே அரசியல் பிழைப்பை நடத்தி வந்த இலங்கை ஆட்சியாளர்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகவே இருக்கும். இவர்கள் தமது ஆட்சி நலன்களுக்காக முழுமையாக மண்டியிடுவர், அல்லது எல்லைக்குட்பட்டு எதிர்ப்பர். எனவே ஆக்கிரமிப்பாளர்களை முற்றிலும் விரட்டியடிக்கவும், வல்லரசுகளின் பிடியிலிருந்து இலங்கையை முழுமையாக விடுவிக்கவும் இலங்கையில் ஒரு உண்மையான ஜனநாயக அரசை அமைக்கவும் வலிமையுள்ள ஒரு புரட்சிகர இயக்கம் வளர்வதே இலங்கை மக்களுக்கு சரியான தீர்வாக அமையும்.

## இலங்கை மக்கள் அனைவரினதும் விருப்பம் இந்திய இராணுவம் வெளியேறவேண்டும் என்பதே

‘‘ஒப்பந்தம் ஒரு அடிமை சாசனம். இந்திய அமைதிப்படை ஒரு ஆக்கிரமிப்புப் படை. எனவே கடைசி இந்திய இராணுவ வீரனையும் வெளியேற்றும்வரை எமது யுத்தம் ஓயாது’’ என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர். இந்நிலையில் இந்திய அரசானது ‘‘புலிகள் மட்டுமே ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அமைதிப்படை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர்’’ என்று பொய்ப் பிரச்சாரம் செய்கின்றது. இந்தியாவும் அதன் கைக்கூலிகளையும் தவிர வேறு யாருமே ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவும் இல்லை, இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று விரும்பவும் இல்லை என்பதே உண்மை நிலையாகும். இந்தியா

எவ்வளவுதான் பொய்ப் பிரச்சாரம் செய்து ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தாலும் உண்மையை மறைக்க முடியாது.

இந்திய இராணுவம் வெளியேறவேண்டும் எனக்கோரும் அமைப்புகளில் சிலவற்றின் கருத்துக்கள்:

தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை என்னும் இயக்கம் 1987 செப்டம்பரில் வெளியிட்ட 'ஒப்பந்தமா? அடிமை சாசனமா?' என்ற பிரசுரத்திலிருந்து... ...

... ... இலங்கை மக்களின் வரலாறு பெருமைக்குரியதொன்றாகும். இலங்கை மககள் கடின உழைப்பாளிகளாகவும் அதே வேளையில் சகல ஒடுக்குமுறைகளுக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் எதிராக உறுதியான போராட்டத்தை முன்னெடுத்தவர்களாகவும் இருந்துள்ளனர். ஆனால் பிற்போக்கு ஆளும்கும்பல்கள் தொடர்ச்சியாக துரோக வரலாற்றையே கொண்டிருந்தனர். மக்களை அடக்கி ஒடுக்குவதிலும், நாட்டை அந்நிய சக்தியளுக்கு அடகு வைப்பதிலும் தமது ஆதிக்க நலன்களைச் சாதித்துக் கொண்டனர்.

இன்று இலங்கை மக்களின் சுதந்திரத்திற்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக இந்திய ராணுவம் இலங்கை மண்ணில் குவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் இந்திய மக்களை அடக்கி ஒடுக்கும் இந்திய ராணுவம் இலங்கையில் மக்களை பாதுகாக்கும் என்று நம்பமுடியுமா? இலங்கையில் உள்ள தேசத்துரோகிகளான இந்திய கைக்கூலிகள், இந்திய இராணுவம் மக்களைப் பாதுகாக்கும் என்று கூறுவதுடன் போற்றிப் புகழ்பாடவும் செய்கின்றனர். இக்கும்பல்களின் துரோகத்தனத்தால் இலங்கை மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு வருவதை நாம் உணரவேண்டும்.

மிகப் பெரும் சமாதானத் தீர்வாக விளம்பரப்படுத்தப்பட்டு வரும் ஒப்பந்கமானது உண்மையில் இலங்கையை இந்திய மேலாதிக்க நலன்களுக்கு அடகு வைத்த ஒரு அடிமை சாசனமே. இந்த அடிமை சாசனத்தின் மூலம் வரவழைக்கப்பட்ட இந்திய இராணுவம் விரட்டியடிக்கப்படல்வேண்டும். இந்த அடிமை சாசனத்திற்கு வால் பிடிக்கின்ற தமிழ் - சிங்கள தேசத் துரோகக் கும்பல்கள் தூக்கியெறியப்படல்வேண்டும். இலங்கையில் நிகழும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டம் ஒன்றே இதனைச் சாதிக்கும்.

**-தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை (1987 செப்டம்பர்)**

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு அடிமை சாசனம். எனவே அது கிழித்தெறியப்படல் வேண்டும். இந்திய இராணுவம் அமைதிப்படையல்ல. இது ஒரு ஆக்கிரமிப்புப்படை. எனவே இது விரட்டியடிக்கப்படல்வேண்டும் என்று தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை கூறுகின்றது. தோழர் சண்முகதாசன் தலைமையில் இயங்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்றே கூறுகின்றது. அதன் அறிக்கையிலிருந்து.....

.......இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததும் இந்தியப்படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று இந்தியப் பிரதமர் பல தடவைகள் அறிவித்துள்ளார். இப்போது இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்த நிலையில் வெளியேறுவதற்கு தயக்கம் காட்டப்படுகின்றது. படைகளை போதிய கால அவகாசம் தேவை என்ற அபத்தமான வாதத்தை அவர்கள் முன் வைக்கிறார்கள். இலங்கைக்குள் வருவதற்கு அவர்களுக்கு இரண்டு நாட்களும் இரண்டு இரவுகளுமே எடுத்தது. ஆனால் இப்போது வெளியேறுவதற்கு இரண்டு மாதங்கள் போதாமல் உள்ளது என்கின்றனர். வெளியேறுவதில் இந்தியப்படை காட்டும் தயக்கம் அவர்கள் இலங்கைக்குள் வந்தது நேபாளம், பூட்டான், சிக்கிம், மாலைதீவு ஆகியவற்றில் செய்ததைப்போல் தங்கள்

மேலாதிக்கத்தை நிலை நாட்டவே என்ற எங்களது நிலைப்பாட்டை முற்று முழுதாக நிருபிக்கின்றது. இந்தியப்படை உடனடியாக விலக்கிக் கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கியப்பட்டு உறுதியாக ஆதரிக்கவேண்டியது எமதுநாட்டின் சகலபிரிவு மக்களினதும் தேசபக்த கடமையாகும்.

**தோழர் என். சண்முகதாசன் (தலைவர்)**
**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி.**

......சமாதானமும், ஜனநாயகமும் இந்த மண்ணில் நிலைக்க வேண்டும் என்று இலங்கை விரும்பினால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நாம் உடனடியாக முறித்து இந்தியப் படைதளை நாட்டை விட்டு வெளியேற்றியாக வேண்டும்.

**ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி**

........இந்திய அமைதிப்படையினர் இங்கு வந்த பிறகு வடக்கிலும் கிழக்கிலும் 4 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லீம் மக்கள் பல்வேறு துன்பங்களுக்கும், சோதனைகளுக்கும் இட்டுச் செல்லப்பட்டுள்ளனர். கிழக்கில் வாழும் முஸ்லீம்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டிருப்பது வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.....

**26 முஸ்லீம் இளைஞர் அமைப்புக்களின் கூட்டமைப்பான**
**'இலங்கை முஸ்லீம் இளைஞர் கூட்டமைப்பு' (பாபிஸ்)**

.......நீண்ட காலமாக நம்மிரு நாடுகளுக்கிடையே நிலவி வந்த உறவில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் விரிசலை ஏற்படுத்தியுள்ளது எமது பிரச்சனைகளுக்கு நாம்தான் கூடிப் பேசி தீர்வு காண வேண்டும். மாறாக எமது நாட்டில் அந்நிய இராணுவம் நுழைந்துள்ளதை தன்மானமுள்ள எந்த ஒரு மகனும் ஏற்றுக் கொள்ள முடியாது.

**-மக்கள் ஐக்கிய முன்னணி.**

.......இந்த நாட்டின் சகல இன மக்களும் இந்தியப் படை இங்கிருந்து வெளியேற வேண்டும் என விரும்புகின்றனர். எமது உள்விவகாரங்களை நாமே பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். எனவே எமது நாட்டு விவகாரத்தில் அந்நிய தலையீடு அவசியமற்றது.....

**-அஞ்சல் - தொலை தொடர்பு சேவையாளர் சங்கம்**

இந்தியப் படை வெளியேற விதிக்கப்பட்டிருக்கும் ஜூலை மாதக் கெடுவை இந்தியாவும் பிற நாடுகளும் ஏற்கத்தான் வேண்டும். இதை இந்தியா எதிர்ப்பது அணிசேரா இயக்கத்திற்கு உறுதுணையான அந்நாட்டின் சொந்த தத்துவமான பஞ்சசீலக் கொள்கைகளை மீறுவதாகும்.

**-பிரம்மஞான சபை**

www.tamilarangam.net

......அமைதிப்படை தனக்குத்தானே ஒரு கூட்டத்தைக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் எந்த அதிகாரத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ அது பொறுப்பானது அல்ல. அதன் அட்டூழியங்கள், தவறுகளுக்கு எதிராக இலங்கை மக்கள் நிவாரணம் பெறவும் வழியில்லை. இந்த நிலைமை அவர்கள் இங்கு இருப்பதை இரட்டிப்பாக குற்றம் சொல்ல வைக்கின்றது. இலங்கையில் அமைதிப்படையின் நடவடிக்கைகள் குறித்தும், அது இலங்கையை சீர்குலைக்கும் வகையில் அதைத் தூண்டிவரும் இந்திய அரசியல் வாதிகள் மீதும் இந்திய மனித உரிமை இயக்கம் விசாரணை நடத்த வேண்டும் என மீண்டும் கோருகிறோம்... ...

**-சமூக சமய நடுநிலையம் சார்பில் அதன் தலைவர்**
**திஸ்ஸ பாலசூரிய**

## சில முக்கிய நபர்களின் கருத்துக்கள்

சிங்கள மருத்துவர் ஒருவர் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு எழுதிய கடிதம்.. .. ..

01-06-88

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களே!

இலங்கைப் பிரச்சனையில் தங்களின் செயல்பாட்டைப் பற்றிய எனது கருத்துக்களைத் தெரிவிக்கவே இதை எழுதுகின்றேன்.

தங்களது இலங்கை-இந்திய ஒப்பந்தம், அமைதியையும் சகஜ நிலையையும் இலங்கையில் நிலைநாட்ட துளியும் உதவாது என்பதை அதைப் படிக்கும் பாமரனும் கூடச் சொல்லிவிட முடியும். நான் விடுதலைப்புலிகளை ஆதரிப்பவன் அல்ல ஆனால் தமது இலட்சியத்திற்காக உயிரையும் விடத் தயாராய் இருக்கின்ற புலிகளை தாங்கள் குவித்திருக்கும் பல இலட்சம் இந்தியத் துருப்புக்களால் ஒரு போதும் வெல்ல முடியாது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். போராளிகளது நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைக்க அமைதிப்படையைக் கொண்டு அடக்கு முறையை அவர்கள் மேல் கட்டவிழ்த்து விடுவது உதவாது.

ராஜீவ் அவர்களே! தங்களுடைய இராணுவத்தைக் குவித்து ஒரு வேளை நீங்கள் பிரபாகரனைக்கூட கொன்றுவிடமுடியும். புலிகள் அமைப்பைக் கூட அழிக்கவும் செய்யலாம். ஆனால் இனவெறி சிங்கள அரசின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள தமிழர்களிடமுள்ள இலட்சிய தாகத்தை கனவிலும் கூட நீங்கள் ஒழித்துவிடமுடியாது. பிரபாகரனுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் பதிலாக மேலும் பல மடங்கு திறமையுள்ள பிரபாகரன்களும், போராளி அமைப்புகளும் அடுத்த சில ஆண்டுகளில் உருப்பெறுவதை உங்களால் தடுத்துவிட முடியாது.

ஒன்றே ஒன்றை மட்டும் நீங்கள் சாதித்துவிட்டதாக பெருமைப்பட்டுக்கொள்ளலாம். மோசமான இலங்கைப் பிரச்சனையை மேலும் மோசமாக்கி விட்டதுதான் உங்களது பங்களிப்பாக இருக்கும். அப்பாவி மக்களைக் கொல்வதால் நீங்கள் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வையா கொடுத்தீர்கள்? எண்ணற்ற பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட தியாகிகளைத்தான் உருவாக்கி வருகின்றீர்கள். தங்களது பையித்தியக்காரத்தனமான இராணுவ ஆக்கிரமிப்பை கைவிடுங்கள். தீரக்கூடிய இலங்கை இனப்பிரச்சினையை தங்களது கேடான நடவடிக்கைகளால் தீர்க்க முடியாததாக்கி வருகின்றீர்கள். இன்னொரு லெபனானை உருவாக்கி வருகின்றீர்கள். மக்கள் விரோத ஜே.ஆர். அரசுடன் கூட்டு சேர்ந்து எமது நாட்டை அழிக்க

முயற்சிக்காதீர்கள். சிறுபான்மை தமிழினம் தனது சொந்த நாட்டில் சமத்துவத்தையும், சகல வாய்ப்பையும் பெற உதவும் பணிகளைச் செய்யுங்கள்.

**அன்புடன்.**
**பிரையன் செனவிரட்னே (மருத்துவர்)**
**அலெக்ஸ்சாண்ட்ரா மருத்துவமனை, பிரிஸ்பேன்**
**(அவுஸ்ரேலியா)**

காந்தீய இயக்கத்தின் பொறுப்பாளர் திரு.டேவிட் ஐயா அவர்களிடம் இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிக் கேட்டபோது அவர் கூறிய கருத்து.

கேள்வி: இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இது ஒரு கொலைகாரனுக்கும், கொள்ளைக்காரனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம். ராஜீவ் கொள்ளைக்காரன், ஜே.ஆர். கொலைகாரன். தமிழ் மக்கள் நலனட பற்றி இவர்கள் துளிகூட கருத்தில் கொள்ளவில்லை.

**-ஆதாரம்: கேடயம் (டிச.'87)**

வண. பிதா சிங்கராயர் அவர்களிடம் இலங்கை-இந்திய நட்புறவுக் கழகம் பேட்டி கண்ட போது அவர் கூறியது.

கேள்வி: இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: இலங்கை-இந்திய என்ற பேச்சுக்கே இங்கே இடமில்லை. இது தத்தமது ஆட்சியை நிலைநிறுத்த விரும்பிய ஜே.ஆர்., ராஜீவ் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட திடீர் காதல் கடிதமேயன்றி வேறல்ல. இதில் தமிழ் மக்கள் விடயம் என்பது வெறும் கண்துடைப்பே.

## சர்வதேச மனித உரிமைக்கழகம் அம்பலப்படுத்தும் உண்மைகள்

இலங்கையில் இந்திய இராணுவம் நடத்தி வருகின்ற அட்டூழியங்கள் சிலவற்றை சர்வதேச மனித உரிமைக் கழகம் **(Amnesty International)** அண்மையில் தொகுத்து வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை அம்பலப்படுத்தியவற்றை இந்திய அரசு மறுக்கவில்லை. மாறாக ''புலிகள் செய்த அட்டூழியங்களை பற்றி எதுவும் சொல்லவில்லை'' என இவ்வறிக்கையைச் சாடியுள்ளது. இதன் மூலம் சர்வதேச மனித

உரிமைக் கழக அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை உண்மைதான் என இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பொலிசும், இராணுவமும் மக்கள்மீது தொடுத்து வரும் தாக்குதல்களை சர்வதேச மனித உரிமைக்கழகம் அம்பலப்படுத்தியபோது அவற்றை வரவேற்றுப் பாராட்டிய இந்தியஅரசு இப்போது தன்னைப் பற்றி அந்த அமைப்பு அம்பலப்படுத்தியவுடன் வானத்துக்கும் பூமிக்குமாக எகிறிக் குதிக்கிறது.

சர்வதேச மனித உரிமைக் கழகத்தின் இவ்வறிக்கையில் இந்திய இராணுவத்தின் முழு அட்டூழியங்களும் தரப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விபரங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சில விபரங்களில் இருந்தே இந்திய கொலைகார இராணுவம் எப்படிப்பட்ட இரத்த வெறியாட்டத்தை இலங்கையில் மேற்கொண்டு வருகின்றது என்பதை நன்கு புரிந்துகொள்ள இயலும். இலங்கை இனவெறி அரசு எவரையும் சுட்டுக் கொல்லவும், சவப் பரிசோதனை கூடச் செய்யாமல் உடலை எரித்து விடவும் இலங்கை இராணுவத்திற்கு அதிகாரமளித்திருந்தது. இலங்கையில் நுழைந்தவுடனேயே இந்திய ராணுவம் இவ் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டது. விருப்பம் போலக் கைது செய்வது, மிருகத் தனமாக சித்திரவதைகள், சுட்டுக்கொன்று உடலை மறைத்துவிடுவது, ஆத்திரத்துடன் பொதுமக்கள் மீது சரமாரியாக சுடுவது, பெண்கள் மீது பாலியல் பலாத்காரத்தைத் தொடுப்பது என சகல காட்டுமிராண்டித்தனங்களையும் இந்திய கொலைவெறி இராணுவம் இலங்கையில் நடத்தி வருவதாக சர்வதேச மனித உரிமைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

இந்திய இராணுவம் தன் இஷ்டப்படி பல இளைஞர்களை கைது செய்து முகாம்களில் வைத்துள்ளது. அவர்கள் அனைவரும் எந்தச் சட்டப்படி சிறை வைக்கப்பட்டுள்ளனர், என்ன குற்றங்களுக்காக சிறை பிடிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்திய அரசு இதுவரை வெளியிடவில்லை என அவ் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. சிறை பிடிக்கப்பட்டவர்களைப் பற்றி விசாரிக்கச் செல்லும் உறவினர்களையும் அடித்துச் சித்திரவதை செய்துள்ளது இந்திய ராணுவம். அந்த நபர் அங்கில்லை என்றால் அவரது உறவினர்களையும் அக்கம்பக்கம் இருப்போரையும் பிடித்து இழுத்துச் செல்கின்றது.

சர்க்காரியில் என்ற 17 வயது இளைஞரை கைதுசெய்த மறு நாளே இந்திய இராணுவம் சுட்டுக்கொன்று, உடலைச் சிதைத்து அவரது வீட்டுமுன் வீசியெறிந்து விட்டுச் சென்றுள்ளது. அதே போல சுப்பன் நடராசன், ராயப்பு ஜேசுராசா, லைத்தி டெனியல் போன்றோரும் இந்தியப் படையால் கொல்லப்பட்டதை மருத்துவச் சான்றிதழ்களோடு அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. இதுபோன்ற பல சம்பவங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் சர்வதேச மனித உரிமைக்கழகத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. ஒரு இளைஞரை நிர்வாணப்படுத்தி கைகளைப் பின்புறம் ஜன்னலோடு சேர்த்துக் கட்டிவைத்து அவருடைய தொப்புளிலும், ஆண்குறியிலும் சக்திவாய்ந்த மின்சாரத்தை இந்திய இராணுவம் பலமுறை பாய்ச்சியுள்ளது. ஒவ்வொரு முறையும் அவர் மயங்கி விழுவதும், பின் மயக்கம் தெளிந்தவுடன் அவரை மாறி மாறி அடிப்பதுமாக சித்திரவதையைத் தொடர்ந்துள்ளது. இன்னொருவரை நீர் நிறைந்த பீப்பாய் ஒன்றினுள் முக்கி முக்கி எடுத்து அவர் இரத்த வாந்தி எடுத்துச் சாகும்வரை நெஞ்சில் பூட்ஸ் கால்களால் மிதித்துள்ளது. நடுத்தெருவில் அப்பாவி மக்களை இந்திய இராணுவம் திடீரென சுட்டுக்கொல்வது அடிக்கடி நடந்துள்ளதாக அறிக்கை அம்பலப்படுத்துகின்றது. இதை இந்திய இராணுவம் ''புலிகளுடன் மோதலில் இறந்தவர்கள்'' என்ற பெயரில் மறைத்து விடுவதையும் அறிக்கை தோலுரித்துக் காட்டியுள்ளது.

இந்தியப்படையால் இழுத்துச் செல்லப்பட்ட பலர் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை. அவர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டு யாருக்கும் தெரியாமல்

பிணங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம் என அறிக்கை சந்தேகம் தெரிவிக்கிறது. காணாமல் போனவர்கள் பட்டியல் ஒன்றையும் சர்வதேச மனித உரிமைக்கழகம் அறிவித்துள்ளது.

மனித குலத்தின் முன்னர் மிகப்பெரிய கொலைகாரனாக இந்திய அரசு இரத்தம் தோய்ந்த கரங்களுடன் நிற்கிறது. இந்திய கொடிய கொலைகாரனுக்கு உரிய தண்டனையை இலங்கையில் தொடங்கி தெற்காசியா முழுவதுமுள்ள மக்கள் விரைவில் வழங்குவார்கள்.

## இந்திய இராணுவம் பற்றி தமிழ் மக்களின் கருத்து என்ன?

இந்திய இராணுவம் இலங்கையை ஆக்கிரமித்து இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகின்றது. தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் காரணமாக இலங்கை மக்கள் அனைவராலும் உதைத்து விரட்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. முற்று முழுக்க தோலுரிக்கப்பட்டு நின்றாலும் தனது ஆக்கிரமிப்புப் பிடியை தளர்த்த மறுக்கின்றது. தமிழ் மக்கள் பாதுகாப்பு, ஒப்பந்தம் நிறைவேற்றம் என்று பசப்பல்களுடன் தொடர்ந்து தனது கொலைக்கரங்களை ஆழப்பதிக்க எத்தனிக்கின்றது. தமிழ் இன துரோகக் கும்பல்களையும், சில எடுபிடி அடியாள் கூட்டத்தையும் வைத்துக்கொண்டு ‘‘இந்தியப்படை வெளியேறக்கூடாது’’ என ஒப்பாரியிட வைக்கின்றது. தனது பாரிய பிரச்சார சாதனங்கள் மூலம் ‘தமிழ் மக்கள் அமைதிப்படை வெளியேறுவதை விரும்பவில்லை, தொடர்ந்து இருப்பதையே விரும்புகிறார்கள்’ என்ற பொய்ப் பிரச்சாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது. இதன் மூலம் தனது ஆக்கிரமிப்பை தொடர முயலுகின்றது.

இந்திய அரசின் இந்தப் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தும் வகையில் இலங்கையில் தமிழ் மக்கள் பலரிடம் ‘கேடயம்’ பத்திரிகை சார்பில் பேட்டியெடுக்கப்பட்டது. இந்திய இராணுவம் உடனே வெளியேறவேண்டும் என்பதே பேட்டி காணப்பட்ட அனைவரின் விருப்பமாக இருந்தது. அவர்களின் கருத்துக்களில் சிலவற்றை இங்கே தொகுத்தளிக்கின்றோம்.

க.முருகேசன்: (வயது 60, இவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்) இவரிடம் அமைதிப்படை பற்றிக் கேட்டபோது அவர் தெரிவித்த கருத்து: இதை அமைதிப்படை என்று கூறுகின்றனர். ஆனால் இதன் நடவடிக்கையைப் பார்க்கும் போது அழிவுப் படையாகவே எண்ணத் தோன்றுகிறது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பதுபோல் நாங்கள் எமக்குள் சண்டையிட்டுக் கொண்டது இவர்களுக்கு நன்கு சாதகமாக அமைந்துவிட்டது. இன்று எமது நாட்டிற்குள் வந்து எம்மையே அடக்கி ஒடுக்க முனைகின்றனர். இந்திய இராணுவத்தை விட இலங்கை இராணுவம் எவ்வளவோ மேல் என்று நினைக்குமளவிற்கு இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் இருக்கின்றன. ரேடியோவில் ‘‘அன்புவழி’’, ‘‘நேசக் கரங்கள்’’ நடத்துகின்றனர். இங்கு வந்து நேரில் பார்த்தால்தான் உண்மை தெரியும். தமிழ் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்று.

www.tamilarangam.net

‘‘இந்திய இராணுவம் இலங்கையில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம்’’ என்று இந்திய அரசு பிரச்சாரம் செய்வது குறித்தும் இவரிடம் கேட்கப்பட்டது. பெரியவர் கூறிய பதில்: ‘சுத்தப் பொய். முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயலுகின்றனர். எந்த மக்கள் விரும்புகின்றனர் என்பதை முடியுமானால் வெளிப்படுத்தலாமே! இதுவரை மூன்று தேர்தல்கள் நடத்திவிட்டனர். இதைவிட ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடத்தி தமக்கு ஆதரவு இருப்பதை நிரூபிக்கலாம் தானே! ‘‘முடியுமானால் வாக்கெடுப்பு ஒன்று நடத்தி மக்கள் எமக்கு ஆதரவு இல்லை என்று நீங்கள் சொல்வதை நிரூபியுங்கள்’’ என்று புலிகள் இந்திய அரசுக்கு விட்ட சவாலை இவர்கள் ஏற்றிருக்கலாம் தானே! ஏன் இந்திய அரசு ஏற்கவில்லை? இதிலிருந்தே அவர்கள் நிலை புரிகிறதல்லவா?

க.குணசேகரன்: (வயது 23, இவர் யாழ் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்.) இவரிடம் இந்திய அமைதிப்படை பற்றி வினவியபோது அவர் கூறியவை: ‘‘இந்தியப்படை அமைதிப்படை அல்ல. இது ஒரு ஆக்கிரமிப்புப்படை. இவர்களின் செயற்பாடு இதையே எமக்கு புலப்படுத்துகின்றது. இலங்கை இராணுவத்தின் அடக்குமுறை அதிகம் இருந்த காலத்தில்கூட எமது பல்கலைக்கழகம் நன்கு இயங்கியது. ஆனால் இன்று இதுவரை இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு எமது பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேர் பலியாகியுள்ளனர். எத்தனையோ மாணவர்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர். மாணவிகள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் அட்டகாசத்தால் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கமுடியாமல் வெகுவிரைவில் மூடப்பட்டு விடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டுமா? என்று கேட்டபோது இவர் கூறிய பதில்:

இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று எந்த ஒரு முட்டாளும்கூட விரும்பமாட்டான். இவர்கள் உடனடியாக வெளியேறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். ஆனால் இவர்கள் தானாக வெளியேற மாட்டார்கள். அடித்தே விரட்டப்படவேண்டும் என்பதையும் அதற்காக எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக் கொள்ள தயாராக இருக்கவேண்டும் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். அன்று ‘‘வியட்நாமில் அமெரிக்கா கற்றுக்கொண்ட பாடத்தை விரைவில் இந்தியா இலங்கையில் கற்றுக்கொள்ளும் இது உறுதி.’’ என ஆவேசத்துடன் பதில் கூறினார்.

நகுலன்: (வயது 18, நெல்லியடி பாடசாலை மாணவர், 12-ம் வகுப்பில் படிக்கின்றார்.) இவரிடம் அமைதிப்படை பற்றிக்கேட்ட போது அவர் கூறியது: ‘‘நான் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். ஒரு நாள் நாங்கள் ரியூட்டரியில் (தனியார் கல்வி நிறுவனம்) கல்வி கற்றுக் கொண்டிருந்த போது திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. பயத்தில் நாம் அனைவரும் மேசைக்குக் கீழே பதுங்கிக் கொண்டோம். சில நிமிடங்கள் கழித்து இந்திய இராணுவத்தினர் எமது இடத்தை சுற்றி வளைத்து எம்மை அருகில் உள்ள (நெல்லியடி) சந்திக்கு அழைத்துச் சென்றனர். அங்கு முதலில் எமது ஆசிரியர் எம் முன்னால் அவர்களால் தாக்கப்பட்டார். அதன்பின் நாங்கள் அவர்களால் மிகவும் மோசமாக தாக்கப்பட்டோம். மாணவிகள் கூட தாக்கப்பட்டனர். நாம் எமது சைக்கிள், செருப்பு, புத்தகங்களைக் கூட எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவை யாவும் எம் கண் முன்னால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இச்சம்பவம் நடந்த பின்பு நான் ரியூட்டரிக்குச் செல்வதை நிறுத்தி விட்டேன். ஏனெனில் இதுபோன்ற சம்பவங்கள் தற்போது அடிக்கடி நிகழ்கின்றன. ஆதலால் பாதுகாப்பு கருதி, செல்ல முடியவில்லை. பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதனால் ரியூட்டரிகளையே நம்பியிருந்தோம். இப்போது அதற்கு வாய்ப்பில்லை. பரீட்சைக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளது. இத்தருணத்தில் இந்நிலை ஏற்பட்டது எமக்கு

மிகவும் வருத்தமாய் உள்ளது. இதற்கு காரணமாய் இருக்கும் இந்திய இராணுவம் இங்கு இருக்க வேண்டும் என்று எந்த மாணவனாவது விரும்புவானா? நீங்களே கூறுங்கள். இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்பதே எமது விருப்பம். இந்திய இராணுவம் வெளியேறினால்தான் நாம் நிம்மதியாக கல்வி கற்க முடியும் என்று நம்புகிறேன்'' என்றார்.

வி. அன்னலட்சுமி: (இவர் கரவெட்டியைச் சேர்ந்த குடும்பப் பெண். வயது 44.) இவரிடம் இந்திய இராணுவம் பற்றிக் கேட்டபோது அவர் கூறிய பதில்: ''இலங்கை இராணுவம் நிகழ்த்திய 'ஒப்பிரேசன் லிபரேசன்' போது கூட நான் என் வீட்டை விட்டுச் செல்லவில்லை. அப்போது என் குடும்பத்திற்கும் எவ்வித இழப்பும் இல்லை. ஆனால் இப்போது இந்திய இராணுவத்தால் நாங்கள் நிம்மதி இல்லாமல் இருக்கின்றோம். வீட்டில் உள்ள ஆண்களை பொது இடங்களுக்கு வரவழைத்துவிட்டு வீட்டை சோதனையிட வருகின்றனர். அப்போது வீட்டில் தனியாக இருக்கும் பெண்களிடம் தரக்குறைவாக நடக்கின்றனர். பல இடங்களில் இவ்வாறான சமயங்களில் இவர்கள் பெண்களை கற்பழித்த செய்திகளை அறியும் போது பயமாக இருக்கின்றது. வீட்டில் இரண்டு குமர் பெண்கள் (கன்னிப் பெண்கள்) இருக்குதள். எமக்கு நிம்மதியே இல்லை. இவர்கள் இங்கு வந்த போது இனிமேல் எமக்கு எந்தப்பிரச்சனையும் இருக்காது என்று நம்பினோம். ஆனால் இன்று எம் கண் முன் நடப்பவற்றை பார்க்கும் போது நாம் ஏமாந்து விட்டதை உணருகின்றோம்.

புலிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டாம். சாப்பாடு கொடுத்தால் சுடுவோம் என்று இந்திய இராணுவத்தினர் மிரட்டுகின்றனர். புலிகள் யார்? அவர்கள் எம்பிள்ளைகள் தானே? அவர்கள் எமக்காகத்தானே போராடுகின்றனர். முன்பு இவர்களும் புலிகளுக்கு ஆயுதம், பயிற்சி, பணம் என்பன கொடுத்தவர்கள்தானே. இன்று தங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்றவுடன் எம்மையும் எதுவும் கொடுக்கக் கூடாது என்று மிரட்டுகின்றனர். இது எப்படிச் சரியாகும்?'' என்று கேட்டார்.

கு.மார்க்கண்டு: (வயது 20, தனியார் கடைஒன்றில் தொழில் செய்பவர்.) இவரிடம் இந்திய இராணுவம் பற்றிக் கேட்ட போது அவர் கூறிய பதில்: ''எனக்கு அரசியல் எதுவும் தெரியாதுங்க. ஆனால் என் கண்ணால் கண்டவற்றை, நான் அனுபவிக்கின்றதை அப்படியே உங்களுக்கு சொல்கின்றேன். அடிக்கடி இங்கு இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் நடக்கும். ஒவ்வொரு வேளையிலும் அப்பாவிகளான எங்களை இந்திய இராணுவம் கொடூரமாகத் தாக்கும். சில வேளைகளில் எங்கள் கடைகளை தீயிட்டுக் கொளுத்துவார்கள். மேலும் எமது கடைகளுக்கு அருகில் இவர்கள் முகாம் இருப்பதால் பாதுகாப்பு கருதி, பயத்தினால் இளைஞர்கள் பெண்கள் வருவதில்லை. வரும் ஒரு சிலரைக்கூட இவர்கள் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்துவார்கள். அத்துடன் இவர்கள் எமது கடைகளில் வாங்கும் பொருட்களுக்கு பணம் தருவதில்லை. கேட்டால் மிரட்டுவார்கள். இதனால் தொழில் செய்வது மிகவும் கஷ்டமாய் உள்ளது. பலர் கடைகளையே மூடிவிட்டார்கள். இந்திய இராணுவம் வெளியேறினால் தான் நிம்மதியாக இருக்கமுடியும். இவர்களால் நாம் பட்ட அவஸ்தைகள் போதும். இனிமேலும் எம்மால் தாங்க முடியாது.

கே.கருணாகரன்: (கிளிநொச்சியைச் சேர்ந்த பள்ளி மாணவர். கிளிநொச்சி நகரில் இவரது தந்தையார் நடத்திவரும் கடைக்கும் சென்று உதவி வருகிறார்.) இவர் தெரிவித்த கருத்துக்கள்:

''இப்போது நிலைமை மிகவும் மோசமாய் இருக்கின்றது. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று சரியாக சொல்ல முடியாது. அந்தளவிற்கு பதட்டமாய் இருக்கின்றது. பாடசாலைக்கு போக முடியவில்லை. போனால் பலவந்தமாக ஊர்வலங்களுக்கு கூட்டிச் செல்கின்றனர். ஆயுத முனையில் கையெழுத்து வாங்குகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, தற்போது விருப்பமில்லாகவர்களைக் கூட நிர்ப்பந்தித்து CVF என்னும்

www.tamilarangam.net

தொண்டர்படையில் சேர்க்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன் திடீரென நகரை இந்திய இராணுவம் சுற்றி வளைத்தது. இளைஞர்களை கைது செய்து தொண்டர்படைக்கு கொண்டு சென்றது. அதில் நானும் பிடிபட்டேன். செய்தியறிந்ததும் என் தந்தையார் வந்து என்னை (இரகசியமாக பணம் கொடுத்து) மீட்டு விட்டார். ஆனால் இச்சம்பவத்திற்கு பின் வீட்டை விட்டு வெளியேறவே பயமாய் இருக்கிறது. நான் தற்போது பாடசாலைக்குக் கூட செல்ல முடியாதுள்ளது.

வி. வசந்தகுமார்: (மன்னாரைச் சேர்ந்த இவர் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்) இவர் கூறிய கருத்துக்கள்: ''இந்திய இராணுவம் பற்றிக் கருத்துச் சொல்லவே பயமாய் இருக்குது. அமைதிப்படை தனது அடிவருடிகளைக் கொண்டு தனக்கு எதிராக கருத்து கூறுபவர்களை சுட்டுக் கொல்லுகின்றது. அமைதிப்படையைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் உயிரின் பெறுமதி ஒரு தோட்டாவின் விலையேயாகும். எனவே இந்நிலையில் எப்படி நாங்கள் துணிந்து கருத்து கூற முடியும்?

நாய்களை விடக் கேவலமாக தமிழ் மக்களை இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொல்லுகின்றனர். ஒரு நாள் எமது சகமாணவன் இந்திய இராணுவத்தால் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டான். இதனால் நாம் எமது பாதுகாப்பை உறுதி செய்யும்படி இந்திய இராணுவத் தளபதியிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் துப்பாக்கியால் பதில் கூறினார்கள். நிராயுதபாணியாக சென்ற எம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். அவ்விடத்திலேயே துடிக்கத் துடிக்க மாணவர் இருவர் மாண்டனர். இந்நிலையில் இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று யாராவது விரும்புவார்களா?

கு. பரராஜசிங்கம்: (யாழ்ப்பாணத்தை சேர்ந்த இவர் தனியார் கம்பெனி ஒன்றில் கணக்கியலாளர்.) இவரிடம் வினவிய போது இவர் கூறிய கருத்துக்கள்.

''கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் எங்கள் கம்பெனியில் தற்போது ஒழுங்காக வேலை நடப்பதில்லை. கம்பெனி நட்டத்தில் இயங்குகின்றது. இரவில் ஊரடங்குச் சட்டம் காரணமாக (ஊரடங்குச் சட்டத்தை நீக்கிவிட்டதாக பத்திரிகையில் அறிவித்தாலும் தற்போதும் அச்சட்டம் இரவில் கடைப்பிடிக்கப்படுகின்றது) வேலை நடைபெறுவதில்லை. பகலில் கூட பிரச்சினைகள் காரணமாக மாதத்தில் பாதி நாட்கள் வேலை நடப்பதில்லை. அப்பிடியானால் கம்பெனி எப்படி இயங்க முடியும்? அமைதிப்படை வந்திறங்கிய பின்னர் இரண்டு வருடங்களில் நிலைமைகள் மேலும் மோசமாகியுள்ளது. எனவே அமைதிப்படை இங்கு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

ப.குலசிங்கம்: (இவர் காங்கேசன் துறையைச் சேர்ந்தவர். ஒப்பந்தத்தையடுத்து அமைதி ஏற்பட்டுள்ளதாக இந்தியா செய்த பிரச்சாரத்தை நம்பி பிரான்சில் இருந்து திரும்பியவர்.) இவர் கூறும் கருத்து: ''ஒலிம்பிக்கில் கோப்பை ஒன்றுகூட கிடைக்கவில்லை என இந்தியர்கள் வருத்தப்பட்டதாக அறிந்தேன். அடுத்தமுறை மனித உயிர்களை இரக்கமின்றிக் கொன்றுகுவிக்கும் போட்டி ஒன்று வைக்கப்படுமாயின் இந்திய இராணுவத்திற்கு நிச்சயம் வெற்றிக் கோப்பைக் கிடைக்கும். இதில் அவர்களை யாரும் வெல்ல முடியாது. உலகிலேயே கேடுகெட்ட இராணுவம் இது. ''இன்னும் எத்தனை தலைமுறை தாண்டினாலும் இந்திய இராணுவம் எமக்கு இழைத்த கொடுமைகள் மறக்க முடியாதவை''.

தி.யோகானந்தம்: (மட்டக்களப்பைச் சேர்ந்த வழக்கறிஞர்.) இவரிடம் கேட்ட போது: ''முதலில் இந்திய இராணுவத்திற்கு அமைதிப்படை என்ற பெயர் எவ்விதத்திலும் பொருந்தாது. இலங்கை இராணுவம் என்ன கொடுமைகள் செய்ததோ அதைவிட பல மடங்கு கொடுமைகள் இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கு செய்துள்ளது. எனவே அமைதிப்படை என்ற பெயர் இதற்கு எப்படிப் பொருந்தும்? இரண்டாவது இவர்கள் உடனடியாக இலங்கையை விட்டு வெளியேற வேண்டும். ஏனெனில் இங்கு வந்து

இரண்டு வருடமாகியும் எவ்வித அமைதியையும் ஏற்படுத்தவில்லை. எனவே அமைதியை ஏற்படுத்த தவறியவர்கள் இனியும் இங்கிருப்பதற்கு எவ்வித தகுதியும் அற்றவர்கள்.

கிழக்கு மாகாண மக்கள் அமைதிப்படை வெளியேறுவதை விரும்பவில்லை என்று கூறப்படுகிறதே அது பற்றி தங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது, ‘‘எந்த முட்டாள் அப்படிச் சொன்னவன்? இங்கு வந்து பார்த்தானா? கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லீம், தமிழ் - சிங்கள கலவரங்களை தூண்டிவிட்டு அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் உட்கார இந்திய இராணுவத்தினர் சதி செய்கின்றனர். அண்மையில் நடந்த தமிழ் - முஸ்லீம் கலவரங்களுக்கு இவர்களே காரணம் என தமிழ், முஸ்லீம் மக்கள் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். திரிகோணமலையில் குண்டு வெடித்து பல தமிழ், சிங்கள அப்பாவிகள் பலியாகவும், இந்திய இராணுவமே பின்னணி என பத்திரிகைகளில் ஆதாரத்துடன் செய்திகள் வெளியாகியுள்ளது. எனவே இவர்களின் சூழ்ச்சிக்கு தமிழ் மக்கள் இனிமேல் பலியாக மாட்டார்கள். தமிழ் மக்கள் இவர்களை நன்கு இனம் கண்டு விட்டனர்.’’ என்றார்.

அவரிடம் ‘‘தமிழ் மக்கள் இந்திய இராணுவம் வெளியேறுவதை விரும்பவில்லை என்று இந்திய வானொலி, தொலைக்காட்சிகளில் கூறப்படுகிறதே’’ அதுபற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்ட போது, ஆயுத முனையில் பலவந்தமாக ஊர்வலத்திற்கு கூட்டிச் சென்று அதையே வானொலி, தொலைக்காட்சிகளில் காட்டுகின்றார்கள். மக்களை மிரட்டிக் கையெழுத்து வாங்கி இந்தியப் பிரதமருக்கு அனுப்புகின்றனர். துப்பாக்கி முனையில் ஆதரவுக் கோஷம் போட வைக்கின்றனர். ஜனாதிபதி பிரேமதாசா தமிழ் பகுதிகளில் இருப்பாராயின் அவரும் கையெழுத்துப் போட்டு ஊர்வலத்தில் செல்வதைத் தவிர வேறு வழியில்லை’’ என்றார்.

இந்திய இராணுவம் இலங்கையில் இருப்பதுதான் தமிழ் மக்களுக்கு நல்லது என்று இந்தியாவில் சோ, ஜெயகாந்தன், ம.பொ.சி. போன்றோர் கூறுகின்றனரே இதுபற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்ட போது:
‘‘ராஜீவ் காங்கிரசின் பணம்தான் இவர்களை இப்படிக் கூற வைக்கின்றது. இவர்கள் கூலிக்கு மாரடிக்கும் கூட்டம். தமிழ் மக்களைப் பற்றி உண்மையில் இவர்களுக்கு அக்கறையில்லை. தமிழ் இனத்துரோகிகள். எம் இனத்தில் இருக்கும் கோடரிக் காம்புகள் இவர்கள். இங்குள்ள உண்மை நிலை புரியாமல் அல்லது புரிந்தும் சுயநலத்திற்காக இவர்கள் இப்படிக் கூறுகின்றனர். ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் இந்திய இராணுவத்தால் எமக்கு எவ்வித நன்மையும் விளையவில்லை. எனவே இந்திய இராணுவம் திரும்பிப் போக வேண்டும் என்பதே எமது விருப்பம் ’’ என்றார்.

எம்.சிவகுமார்: (யாழ் பொது மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் (டாக்டர்) ) இவரிடம் அமைதிப்படையைப் பற்றி கேட்ட போது அவர் கூறியது: ‘‘இதை அமைதிப்படை என்று சொல்லவே வெட்கமாய் இருக்கின்றது. ஏனெனில் இந்த இராணுவம் எமது ஆஸ்பத்திரியில் ஆடிய வெறியாட்டத்தை நாம் எளிதில் மறக்க முடியாது. இலங்கை இராணுவத்தினர் கூட எமது ஆஸ்பத்திரியைத் தாக்கவில்லை. ஆனால் இவர்கள் எமது ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த எத்தனை ஊழியர்களை சுட்டுக் கொன்றார்கள் அந்த கோர சம்பவத்தை இன்று நினைத்தாலும் ரத்தம் கொதிக்கின்றது. எனவே மனிதாபிமானமற்ற இவர்களை அமைதிப்படை என்று குறிப்பிட்டுக் கேள்வி கேட்காதீர்கள்.

இலங்கை ஜனாதிபதியின் கட்டளைப்படியே இந்திய இராணுவம் இயங்கும். அவர் எப்போது வெளியேறச் சொல்கிறாரோ, அப்போதே வெளியேறி விடும் என்று இந்திய அரசு திரும்பத் திரும்பக் கூறியது. எனவே இப்போது இலங்கை ஜனாதிபதி வெளியேறும்படிக் கேட்கும் போது மரியாதையாக வெளியேறுவதுதான் முறை. அதை விடுத்து இப்போது ‘‘நாங்கள் தமிழ் மக்களுக்கு ஆதரவாகத்தான் வந்தோம். தமிழ் மக்கள் கூறினால்தான் வெளியேறுவோம்’’ என்று கூறுவது பொருத்தமற்றது. அவ்வாறே

எடுத்துக் கொண்டாலும் இந்தப் பொறுப்புணர்ச்சி அன்றே ஏற்பட்டு புலிகள் தளபதிகளை இலங்கை இராணுவத்திடமிருந்து மீட்டுக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லையே. எனவே இந்திய இராணுவம் தான் தமிழ் மக்களுக்காக இருப்பதாக இனிமேல் கூறுவதற்கு அருகதை கிடையாது. அது மரியாதையாக வெளியேறுவதுதான் நல்லது.

# வல்வெட்டித்துறை படுகொலைகள்

லண்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' செய்தித்தாளில் அதன் இலங்கை நிருபர் கிரிஸ் நட்டால் எழுதியவை:

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியை ஆக்கிரமித்திருக்கும் இந்திய இராணுவம் கடந்த இரண்டு ஆண்டு காலமாக நடத்தியுள்ள படுகொலைகளில் மிக மோசமான படுகொலையை அண்மையில் செய்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதியன்று நடந்த இந்தப் படுகொலை நிகழ்ச்சிகளைப் பற்றி யாரும் வெளியில் தகவல் தரமுடியாதபடி இந்திய இராணுவம் மூடிமறைக்க முயற்சித்தபோதிலும் பத்திரிகையாளர்களும், மனித உரிமைக்காகபோராடுவோரும் பல உண்மை விபரங்களை சேகரித்து வெளிப்படுத்தியுள்ளனர்.

மனிதப் படுகொலை நடத்திய இந்திய இராணுவம் வல்வெட்டித்துறை நகரையே தரைமட்டமாக்கும் திட்டத்துடன் செயல்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் எவரும் வல்வெட்டித்துறையை நெருங்க முடியாதபடி இந்திய இராணுவம் சாலைத் தடுப்புகளை நிறுவியிருந்தது. ஏன், மருத்துவர்களைக் கூட அது ஊருக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. அத்துடன் பல நாட்களுக்கு ஊரடங்கையும் பிறப்பித்து எவ்வித விபரமும் வெளியே கசிந்து விடாதபடி மூடி மறைத்துள்ளது. பத்திரிகையாளர்களின் கடும் முயற்சிக்குப் பிறது ஆகஸ்ட் 11 வாக்கில்தான் வல்வெட்டித்துறை படுகொலையைப் பற்றி விவரங்கள் வெளியே வரத் துவங்கின.

இந்தியப் படையின் ரோந்துப் பிரிவு ஒன்றை புலிப்படையினர் தாக்கியதையடுத்து இந்திய இராணுவம் படுகொலைகளைத் துவக்கியது. பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களும், இளைஞர்களும் வீடுகளில் வைத்து எரிக்கப்பட்டனர். அவர்களை நோக்கி வரிசையாக நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். கைகள் கட்டப்பட்டு தரையில் குப்புற படுக்கச் சொல்லப்பட்டு முதுகில் சுட்டு சாகடிக்கப்பட்டனர். வல்வெட்டித்துறை சம்பவத்தில் பொதுமக்கள் இறந்துள்ளனர் என்பதை ஆகஸ்ட் 11 அன்று தான் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் ஒப்புக்கொண்டது. அப்போதும் கூட ''வெறும் 24 பேர்தான். அவர்களும் கூட இருதரப்பினரும் இடையிலான துப்பாக்கி சண்டையின் போது குண்டடிபட்டுச் செத்தார்கள்'' என்று தான் கூறியது. ஆனால் வெளியிலிருந்து கிடைத்த தகவல்கள் வல்வெட்டித்துறை நகர் முழுவதும் மனித சடலங்கள் இறைந்து கிடப்பதாகவும் அவர்கள் எல்லோருமே துப்பாக்கி சண்டையின்போது இடையில் சிக்கி மாண்டவர்களாக இருக்கவே முடியாது என்று கூறுகின்றன.

வல்லை நகரம் புலிப்படைத் தலைவர் பிரபாகரனின் சொந்த ஊர் என்பதாலும், புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதாலும் பழிவாங்குவதற்காகவே இந்திய இராணுவம் தறிகெட்டு அலைந்துள்ளது. கொல்லப்பட்ட மக்களில் பலருடைய சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு உருக்குலைக்கப்பட்டிருந்தன. படுகாயமடைந்த பலருடைய கைகளும், கால்களும் வெட்டியெடுக்கப்பட வேண்டியிருந்தன. 123 வீடுகள், 43 கடைகள், 4 சினிமா கொட்டகைகள், நூலகம், 69 வாகனங்கள், 12 மீன்பிடி படகுகள், 130 வலைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. வல்லை மக்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் ஊரைவிட்டு ஓடிவிட்டதால் ஊரே வெறிச்சோடிக் கிடக்கிறது. 500த்துக்கும் அதிகமான மக்கள் கோயில்களிலும், சர்ச்சுகளிலும், பள்ளிக்கூடங்களிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். இந்தியப் படையினர் ஊரில் இருந்த உணவுப்பொருட்கள் எல்லாவற்றையும் பொசுக்கிவிட்டதால் மக்கள் எவ்வித உணவுக்கும் வழியின்றி தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

‘‘எக்ஸ்பிரஸ்’’ நிருபர் ரீட்டா செபாஸ்டியன் நேரில் சென்று பேட்டி கண்டு எழுதியவை:

18 வயதுடைய ராஜேஸ்வரன் புஸ்பராஜா ஓய்வுபெற்ற அரசு அதிகாரியான சுப்பிரமணியம் என்பவரின் வீட்டில் தனது குடும்பத்துடன் அடைக்கலம் புகுந்திருந்தனர். ராஜேஸ்வரன் கூறிய வாக்குமூலம்:

அன்று மதியம் 3 மணி வாக்கில் எங்கள் வீட்டுக்குள் இந்திய இராணுவத்தினர் புகுந்தனர். சுப்பிரமணியத்தை முதலில் சுட்டுக் கொன்றனர். பிறகு ஆண்களையும், பெண்களையும் தனித்தனியே பிரிந்து நிற்கச் சொல்லி உத்தரவிட்டனர். இரு பிரிவினரையும் சுட்டுக் கொன்றனர். நான் துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடனேயே குண்டடிபட்டவனாக நடித்துக் கீழே சுருண்டு விழுந்துவிட்டேன். எனது தாயும், சகோதரனும் உட்பட ஒன்பது பேர் செத்து விழுந்ததைக் கண்ணால் கண்டேன். இந்திய இராணுவம் வெளியேறியபின்பு மடந்தை பிள்ளையார் கோயிலடிக்கு எனது மற்றொரு சகோதரனையும், சகோதரியையும் தேடிப் போனேன். ஆனால் அதற்குள் ஊரடங்கு போடப்பட்டுவிட்டதால் திரும்ப முடியவில்லை. மீண்டும் 4-8-89 மதியமே வீட்டுக்குத் திரும்ப முடிந்தது. இந்திய இராணுவம் கொன்று போட்ட ஒன்பது பேரின் உடல்களும் அழுகிக் கொண்டிருந்தன. ஒன்பது பேரின் சடலங்களையும் ஒரே குழியிலிட்டு அடக்கம் செய்தோம்.

49 வயதான அருணாநிதி சிவலிங்கம் என்ற பெண் கூறிய வாக்குமூலம்: மதியம் 1 மணியளவில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல்களின் அதிர் வேட்டுக்களும் ஒலித்தன. சுமார் 2 மணி வாக்கில் திடீரென எங்கள் வீட்டுக்குள் நுழைந்த இந்தியப் படையினர் கண்ணில்பட்ட பொருட்களையெல்லாம் அடித்து நொறுக்கினர். எனது கணவரின் 62 வயது சகோதரரும் மற்றொரு வயதான உறவினருமே வீட்டில் இருந்தனர். இருவருக்குமே போராளிகளுடன் எவ்விதத் தொடர்பும் இல்லை எனக்கூறி அடையாளமாக அட்டைகளைக் காட்டினோம். ஆனால் இருவருக்கும் துப்பாக்கிக் குண்டுகளே பதிலாகக் கிடைத்தன.

வல்வெட்டித்துறை மக்கள் கமிட்டித் தலைவர் சுப. ரத்தினம் செல்வேந்திரா கூறியதாவது: கடந்த பல மாதங்களாக எவ்வித அசம்பாவிதமும் இன்றி அமைதியாக இருந்தது இவ்வூர். மேலும் இது புலிகளின் செல்வாக்குள்ள ஊர் என்பதால் வல்வெட்டித்துறையை சுற்றி ஏழு இந்தியப்படை முகாம்கள் வளையமிட்டிருந்தன. ஆகஸ்ட் 2 அன்று புலிகளின் தாக்குதல் நடந்தவுடன் இந்த முகாம்களை நோக்கி மேலும் படைப்பிரிவுகள் வரத் தொடங்கின. பல ஆயிரம் இந்திய இராணுவத்தினர் இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களைச் சூழ்ந்து கொண்டதால் மக்களால் தப்பிச் செல்ல முடியவில்லை. புலிகளுக்கும் இந்தியப்படைகளுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு தொடங்கியவுடன் தெருக்களில் இருந்த மக்களனைவரும் கட்டிடங்களுக்கு ஓடி ஒளிந்து கொண்டனர். எனவே இருதரப்பினருக்கும் இடையே நடந்த மோதலின்போது

இடையில் சிக்கி மக்கள் இறந்ததாகச் சொல்லப்படுவது அப்பட்டமான பொய். பெருவாரியாக இந்தியப்படைகள் ஊருக்குள் நுழையத் தொடங்கியவுடன்தான் மனிதப் படுகொலைகளே ஆரம்பமாயின.

பருத்தித்துறை பொது மருத்துவமனையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் பணியாற்றும் பிரெஞ்சு டாக்டர் கூறியது: கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த 80 பேருக்கு இங்கு சிகிச்சை அளித்துள்ளோம். நாளுக்கு நாள் நிலைமைகள் மோசமாகிக் கொண்டு போகின்றது. ஜூலை 26-ல் இந்தியப் படை வீரர் ஒருவரை புலிகள் சுட்டுக் கொன்றதையடுத்து இந்திய இராணுவம் தெருக்களிலும், வீடுகளிலும் கண்மூடித்தனமாக சுட்டதில் 13 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏ. ஆர். சிவகுரு என்பவர் கூறியது:

மாலை 4 மணிக்கு இராணுவத்தினர் வீட்டின் பின்புறச்சுவர் ஏறிக் குதித்து வீட்டின் கொல்லைப்புறத்துக்கு வந்தனர். யாரையும் சுடவேண்டாம் என்று கதறி அழுதபடி பெண்கள் சிலர் அவர்களின் காலடியில் வீழ்ந்தனர். ஆனால் படையினர் அவர்களை எட்டி உதைத்து ஒருபுறம் தள்ளினர். பிறகு ஒரு சார்ஜன்ட் அங்கு வந்து 18 வயது முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்களை கூட்டத்திலிருந்து பிரிந்து வீட்டுக்குப் பக்கத்திலிருந்த மாட்டுக் கொட்டகை எதிரில் வரிசையாக உட்காரச் சொன்னார். பிறகு இராணுவத்தினர் சுட்டனர். 4 பேர் உயிரிழந்தனர். தனது கணவன் இறந்ததற்காக ஒரு பெண் வீறிட்டு அழுதாள். ‘‘கத்தாதே இல்லையென்றால் உன்னையும் கொன்றுவிடுவோம்’’ என்று அவர்கள் அவரை மிரட்டி அடக்கினர்.

# பாலியல் பலாத்காரம்

இந்திய இராணுவம் பெண்களை பாலியல் பலாத்காரப்படுத்துகிறது என்பதை ஆரம்பத்தில் சுட்டிக்காட்டிய போது, ‘‘இந்திய இராணுவமா? நிச்சயம் இருக்காது. தாய்க்குலத்தை தெய்வமாக வணங்கும் ஒரு நாட்டின் இராணுவம் நிச்சயம் பெண்களைக் கற்பழிக்காது’’ என ராஜீவ் கும்பல்களும் அவருடைய எடுபிடிகளும் மறுத்தார்கள். பல மக்கள் கமிட்டிகளும், வெகுஜன அமைப்புகளும் ஆதாரத்துடன் இந்திய இராணுவத்தின் முன்வைத்த போது வேறு வழியின்றி (கண் துடைப்பு) விசாரணை செய்து சில இராணுவ தலைமைப் பீடம் அறிவித்த போது, மறுத்தவர்கள் மௌனமானார்கள். கேட்பாரற்ற நிலையில் கட்டுப்பாடற்ற இந்திய இராணுவம் இன்று நடத்தும் பாலியல் பலாத்காரங்களை அறிபவர்கள் உலகிலேயை மிகக் கேவலமான காட்டுமிராண்டி இராணுவம் இந்திய இராணுவம்தான் என்ற முடிவுக்கே வர முடியும்.

அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றை உதாரணத்திற்கு இங்கே குறிப்பிடுகின்றோம். இதுபோன்ற சம்பவங்கள் தற்போது சர்வ சாதாரணம். எனவே இதில் இருந்தே இந்திய இராணுவத்தின் உண்மை சொரூபத்தை உணர்ந்து கொள்ளலாம்.

www.tamilarangam.net

மந்திகைக்கு அருகில் உள்ள துன்னாலை என்னும் இடத்தில் இச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஜுன் மாதம் இவ்வூர் கோயில் அர்ச்சகரின் மனைவி (பிராமணப் பெண்) இந்திய இராணுவத்தால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது தொடர்பாக இவ்வூர் மக்கள் ஊர்வலமாகச் சென்று இந்திய இராணுவ முகாம் தளபதியிடம் முறையிட்டனர். அவர்களுக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. மாறாக இந்திய இராணுவத்தால் அடித்து விரட்டப்பட்டனர். பின்பு ஜுலை மாதத்தில் ஒரு நாள் ரோந்து சென்ற இந்திய இராணுவத்தினர் துன்னாலை வீதியில் வைத்திருந்த பெண்மணியைப் பாலியல் பலாத்காரம் செய்தது. அவருடைய அழுகைக் குரலைக் கேட்டு ஓடிவந்த அப்பெண்ணின் தாயார், சகோதரியார் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். பல இராணுவ வீரர்களால் மாறி மாறி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பின்பு அப்பெண்ணும் சுட்டுக் கொல்லப்பட்டாள். அதன் பின்பு அப்பெண்கள் மூவரினதும் உடல்களையும் அவ்வூர் மக்கள் கார் வண்டியில் அருகில் உள்ள மந்திகை அரசாங்க பொது மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அப்போது வழியில் இவர்களை மறித்த இந்திய இராணுவம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அனுமதித்தால் பின்னாடி தங்களுக்கு ஏதும் ஆபத்து வரலாம் என அஞ்சி அந்த இடத்திலேயை கார் டிரைவரை துப்பாக்கியால் சுட்டதுடன் அப்பெண்ணின் உடல்களையும் வண்டியையும் பெற்றோல் ஊற்றி கொளுத்தினார்கள். (கார் டிரைவர் துப்பாக்கிச் சூடு காயங்களுடன் தப்பிவிட்டார்).

இந்திய இராணுவம் பல சோதனைச் சாவடிதளை அமைத்தும், வீடு வீடாகச் சென்றும் சோதனையிடுகின்றது. அவர்களது சோதனை முறைகளும் அதற்கானபெயர்களும் இதோ:

கிரினைற் செக்கிங்: இளம் பெண்களின் மேற்சட்டைக்குள் கைவைத்து பெண்ணின் மார்பகத்தை கசக்குவார்கள். இந்த கேடுகெட்ட செயலைப் பற்றிக் கேட்டால் இதுதான் ‘கிரினைற் செக்கிங்’ என்பார்கள். அதாவது மார்பகத்திற்குள் கிரினைற் ஒழித்து வைத்திருக்கிறார்களா என்பதை அறியும் சோதனையாம் இது. (கிரினைற் என்பது எறியும் வெடிகுண்டு)

பிஸ்டல் செக்கிங்: பெண்களின் பெண் உறுப்பில் கை வைத்து இறுக்கமாக தடவுவார்கள். அயோக்கியத்தனமான இந்த செயலை பெண்கள் பிஸ்டல் ஒளித்து வைத்திருப்பதை தாங்கள் இப்படித்தான் அறிந்து கொள்வதாக கூறுவார். (பிஸ்டல் என்பது சிறிய கைத்துப்பாக்கி.)

இதுதான் கொடுமை என்றால் இதைவிட கொடுமை என்னவெனில் இதுபோன்ற சோதனைகள் பெற்றோர் சகோதரர் முன்னிலையில் நடக்கும் போது அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலையாக இருப்பது. அவமானத்தால் சிலர் தற்கொலை செய்துள்ளனர். பலர் வீடுகளை விட்டு வெளியே வருவதில்லை. இன்னும் சிலர் நாட்டை விட்டே வெளியேறுகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் பிரதமராக இருந்த வேளையில் பாராளுமன்றத்தில் தெரிவித்தது.

400க்கும் மேற்பட்ட தமிழ் பெண்களை இந்திய இராணுவத்தினர் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தியுள்ளனர். 79 வயது மூதாட்டியைக் கூட பாலியல் பலாத்காரப்படுத்தியுள்ளனர்.

தேடுதல் என்ற பெயரில் வீடு வீடாகச் செல்லும் அமைதிப்படையினர் ஒவ்வொரு வீட்டிலும் பெண்களையும் ஆடுகளையும் தேடுகின்றார்கள்.

## உண்மைக்காக சிந்தும் இரத்தம் வீண்போகாது

‘‘....வாழ்க்கை என்பது எங்களுக்கு கனவாகி விட்டது. அந்தக் கனவில் இருந்து அன்றாடம் வெடிச் சத்தங்களே எம்மை விழிக்கச் செய்கின்றன.’’

‘‘எமது நாட்டில் நேரம் பிணங்களின் எண்ணிக்கையைக் கொண்டுதான் கணக்கிடப்படுகின்றது...... இப்போது நேரம் பன்னிரண்டு ஆக இன்னும் ஐந்து மரணங்கள் உள்ளன.... இப்போது நேரம் நான்கு கழித்து 30 பிணங்கள்......’’

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் செப்டம்பர் மாதம் 29-ம் திகதி போராட்டம் நடத்திக் கொண்டிருந்த மாணவர்கள் கையில் ஏந்திப் பிடித்திருந்த முழக்க அட்டைகளின் வாசகங்களில் சிலவையே மேலே உள்ளவை. யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் ரஜனி திரங்கமவின் படுகொலையைக் கண்டித்தே மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். டாக்டர் ரஜனி திரங்கம பல ஆண்டுகளாக மருத்துவ பீட உடலாற்றியல் துறையில் ஒரே விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் இருந்து வந்தார். இவர் பெண் போராளிகளில் ஒருவரான நிர்மலா நித்யானந்தனின் சகோதரியாவார். சமூக உணர்வு கொண்ட ரஜனி திரங்கம வெறும் விரிவுரையாளராக இராமல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புனர் வாழ்வுக்குமாக பாடுபட்டார். பல்கலைக்கழக ஆசிரியர்கள் மத்தியில் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான போராளியாக விளங்கினார்.

சமீபத்தில், இலங்கையில் நடந்து வரும் மனித உரிமை மீறல்கள் பற்றி குறிப்பாக இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றி ‘உடைந்த பனைமரங்கள்’ (Broken Palmayrah) என்ற தலைப்பில் நூலை வெளியிட்டார். மனித உரிமை மீறல்களை தொடர்ந்து உலகிற்கு அம்பலப்படுத்திய ரஜனி திரங்கம பட்டப் பகலில் பல்கலைக் கழகத்திற்கு முன்னாடியே சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு முன்னர் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இலங்கையில் இருக்கும் அனைத்து பல்கலைக்கழகமும் மூடப்பட்டிருக்கும் வேளையில் யாழ் பல்கலைக்கழதம் மட்டுமே இயங்கி வந்தது. மாணவர்கள், விரிவுரையாளர் படுகொலைகளைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குமா என்பது சந்தேகமே.

ரஜனி திரங்கமவின் கொலை சமூக நலனில் அக்கறை கொண்டு குரல் எழுப்பும் அறிவு ஜீவிகளை வாய்மூடி மௌனியாக இருக்கும்படி மறைமுகமாய் மிரட்டுவதாய் உள்ளது.

எனினும் மிரட்டுபவர்கள் நோக்கம் நிறைவேறப் போவதில்லை. ஏனெனில் உண்மைக்காக சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி இரத்தத்தின் பின்னும் ஓராயிரம் மக்கள் கிளர்ந்தெழுவதுதானே வரலாற்று உண்மை.